**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -
**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **16/2019**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW1
Defendant :
Court :

Name : மதியழகன்

Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

22.5.2024 **CC 16/2019** (எதிரிகள் **8, 15** ஆஜரில்லை, மற்ற எதிரிகள் அனைவரும் ஆஜர் )

**முதல் விசாரணை**:

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து 2018-ம் வருடம் பணிஓய்வு பெற்று திருப்புவனத்தில் வசித்து வருகிறேன். நான் 3.5.1999-ம் வருடத்தில் நான் திருப்புவனம் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். சாட்சிகள் நரசிங்கம், ராஜன், வெள்ளத்துரை ஆகியோர்களை தெரியும். நரசிங்கம் தற்போது இறந்துவிட்டார். அவர்கள் என்னுடன் திருப்புவனம் காவல்நிலையத்தில் பணிபுரிந்தவர்கள். சாட்சி முருகேசன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியும். கடந்த 3.5.1999-ம் தேதி திருப்புவனம் நகரில் நடந்த தேவர் பேரவையினர் சம்மந்தமான கலவரத்தில் கைது செய்யப்பட்ட ஜெகதீசன் என்பவருக்கு ஏற்பட்ட உடல் நிலைக்குறைவு காரணமாக அவர் இறந்துவிட்டதால் பிரச்சனை ஏற்பட்டது.

2. அதனால் மீண்டும் பிரச்சனை வரக்கூடாது என்று திருப்புவனம் காவல்நிலையம் முன்பு நானும், தனிப்பிரிவு தலைமைக்காவலர் நரசிங்கம், முதல் நிலைக்காவலர் வெள்ளத்துரை, ஆயுதப்படை காவலர் ராஜன் ஆகியோர்கள் பாதுகாப்பு அலுவலில் இருந்தபோது இரவு சுமார் 9.30 மணியளவில் எதிரிகள் அனைவரும் காவல்நிலையம் முன்பு வந்து காவல்நிலையத்தை நோக்கி கற்களை வீசினார்கள். ஆட்கள் மீதும் காவல்நிலையத்தின் மீதும் கற்கள் விழுந்தது. எதிரிகள் கற்களை எறிந்ததில்

தலைமைக்காவலர் நரசிங்கம் என்பவருக்கு இடது கண்ணுக்கு கீழ் வீக்கக்காயமும், ரத்தக்காயமும் ஏற்பட்டது. மற்றொரு ஆயுதப்படை காவலர் ராஜன் என்பவருக்கு இடது மார்பில் கற்கள் விழுந்ததில் இடது மார்பில் காயம் ஏற்பட்டது. சட்ட ஒழுங்கு பிரச்சனை தொடர்ந்து இருந்து வந்ததால், பாதுகாப்பில் இருந்து வந்ததால் மறுநாள் 4.5.1999 அன்று இரவு 7.15 மணியளவில் இது சம்மந்தமாக தலைமைக்காவலர் நரசிங்கம் என்பவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்.

3. காயம்பட்ட தலைமைக்காவலர் நரசிங்கம் மற்றும் காவலர் ராஜன் இருவரும் திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டனர். எதிரிகளின் செயலால் எங்களது அரசு பணிக்கு பாதிப்பு ஏற்பட்டது. இவ்வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:

1. இவ்வழக்கில் புகார் கொடுத்த நபரும், சாட்சியப்பட்டியலில் உள்ள நபர்களும் அரசு ஊழியர்கள் என்றால் சரிதான். இறந்த போன ஜெகதீசன் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் லாடனேந்தல் கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும் அவர் அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரி லோகனாதனைத் தவிர மற்றவர்கள் அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் முக்குலத்தோர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

2. நான் அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்தவர் என்றால் சரியல்ல நான் மறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். ஜெகதீசன் என்பவர் காவல்நிலையத்தில் கைது செய்யப்பட்டு விசாரணையிலிருந்தவர் காவலர்களால் தாக்கப்பட்டு உடல்நலக்குறைவு ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.. ஜெகதீசன் என்வர் இறப்பிற்கு நீதி கேட்டு திருப்புவனம் பகுதியில் உள்ள முக்குலத்தோர் சமுதாயத்தினர் போராட்டம் நடத்தினார்கள் என்றால் சரிதான். மேற்படி ஜெகதீசன் என்பவர் காவல்நிலையத்தில் வைத்து காவலர் தாக்கியதால் இறந்ததால் வழக்கை திசை திருப்புவதற்காக இந்த எதிரிகள் மீது இந்த பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3. எனது சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம். அல்லாளப்பேரி கிராமம் ஆகும். நான் திருப்புவனத்தில் கடந்த 30 வருடமாக குடியிருந்து வருகிறேன். நான் திருப்புவனத்தில் 30 வருடமாக குடியிருந்து வருவதாலும், நான் முக்குலத்தோர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதாலும் ஆஜர் எதிரிகளை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அரசின் புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஜெகதீசன் மரணத்திற்கு காரணமாக இருந்த காவல்துறை அதிகாரிகள் மீது விசாரை ண நடத்தப்பட்டது என்றால் சரியல்ல.

4. நான் சம்பவ சமயத்தில் திருப்புவனம் காவல்நிலையத்தில் பணிபுரியவில்லை என்றாலும் நான் சொன்னது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் கற்களை கொண்டு காவல்நிலையத்தில் வீசவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.